# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## S.C.216/2023

## CNR.No.TNCB19000

| Deposition | : | PW.3 |
| --- | --- | --- |
| Name | : | செல்வகுமார் |
| Father's / Husband Name | : | சுப்ரமணியம் |
| Village / முகவரி | : | க்யூ பிரான்ச் |
| Taluk / தாலுக்கா | : | கோயமுத்தூர் |
| Age / வயது | : | 47 |

The witness swearned under Oaths Act 1969 on this the day of 20th August 2025

1, 6 எதிரிகள் ஆஜர் இல்லை. மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கோயமுத்தூர் க்யூ பிரான்சில் தலைமைக்காவலராக பணிபுரிகிறேன். கடந்த 04.05.2019 ம் தேதி மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் காலை 8.00 மணிக்கு கண்காணிப்பு அலுவலாக நானும் என்னுடன் தலைமைக்காவலர் மனோஜ், காவலர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் காரமடை காவல் நிலைய குற்ற எண். 134/2019 பிரிவு 174 குற்ற விசாரணை முறை சட்டம் வழக்கில் இறந்துபோன பழனிச்சாமி என்பவரின் பிரேதம் மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டிருந்தது. அப்போது அங்கு பழனிச்சாமியின் இறப்பில் சந்தேகம்இருப்பதாக கூறி அவரது உறவினர் மற்றும் க்யூ பிரிவால் கண்காணிக்கப்படும் அமைப்புகளை சேர்ந்தவரின் தூண்டுதலின்பேரில் மேற்படி வழக்கில் இறந்துபோன பழனிச்சாமியின் மகன்

ரோகித் குமார் பத்திரிக்கையாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது கண்காணிப்பு பணியில் இருந்த பெரியநாயக்கன்பாளையம் காவல் உட்கோட்ட துணைக் கண்காணிப்பாளரிடம் பொதுநல மாணவர் எழுச்சி இயக்கத்தை சேர்ந்த அருண், சாதி ஒழிப்பு விடுதலை முன்னனியை சேர்ந்த நாகராஜ், ஹரிமன்னன், ரவிக்குமார், ஆகியோர் காவல் துணைக்கண்காணிப்பாளரிடம் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்கள்.

அங்கு கண்காணிப்பு பணியில் இருந்த காவலர் கிருஷ்ணமூர்த்தியை பொதுநல மாணவர் எழுச்சி இயக்கத்தை சேர்ந்த தினேஷ் என்பவர் காவலர் கிருஷ்ணமூர்த்தியை நீதாண்டா உளவுத்துறை க்யூ பிரிவு போலிஸ் நாயே தாயோழி என்று கூறி தன் இரு கைகளாலும் கழுத்தை பிடித்து நெருக்கி நீ செத்துத் தொலையடா என்று தாக்கினார்.

அங்கிருந்த நாகராஜ் இவனை கொன்னாத்தான் உளவுத்துறை போலிசுக்கு பயம் வரும் என்று கூறி காவலர் கிருஷ்ணமூர்த்தியின் முதுகில் அவரது கைகளால் ஓங்கி குத்தினார். அதே இடத்தில் பொதுநல மாணவர் எழுச்சி அமைப்பை சார்ந்த அருண் க்யூ பிரிவு போலிஸ் நாயை கொன்னாத்தான் மற்ற க்யூ பிரிவு போலிஸ்க்கு பாடமாக இருக்கும் என்று கூறி கிருஷ்ணமூர்த்தியின் நெஞ்சிலும் வலது பக்க விலாவிலும் ஓங்கி குத்தினார். அப்பொழுது தினேஷ் என்பவர் கிருஷ்ணமூர்த்தியின் கையில் இருந்த செல்போனை பிடுங்கி கிருஷ்ணமூர்த்தியின் தலையிலும் கழுத்திலும் ஓங்கி குத்தினார்.

நாகராஜ் செல்போனை பிடுங்கிக்கொண்டு ஓடினார். அப்போது கிருஷ்ணமூர்த்தியை சுற்றி வளைத்துக் கொண்டனர். சேலம் சேகுவேரா பொதுநல மாணவர் எழுச்சி அமைப்பைச் சேர்ந்த மாலதி, மணிகண்டன் ஆகியோர் சேர்ந்து தாக்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களை அனைவரும் சேர்ந்து தாக்கியதால்

கிருஷ்ணமூர்த்தி நிலை குழைந்து ஐயோ என்னை காப்பாற்றுங்கள் என்னை கொன்று விடுவார்கள் என்று அலறி கீழே விழுந்தார். நானும் மனோஜூம் செல்போனை எடுத்து சென்ற நாகராஜ் ஓடினார் அவருக்கு பின்னால் அவருடைய சகாக்கலான ஆஜர் எதிரிகளும் மற்ற எதிரிகளும் ஓடினார்கள், நாங்கள் துரத்திக் கொண்டு போன போது அவர்கள் ஓடி விட்டார்கள். நாங்கள் கிருஷ்ணமூர்த்தி யை வந்து பார்க்கும்போது அங்கிருந்த பொது மக்களும் சிதறி ஓடினார்கள். எங்களுடன் இருந்த 2, 3 பொதுமக்களின் உதவியு டன் கிருஷ்ணமூர்த்தியை மேட்டுப்பாளைய ம் அரசு மருத்துவமனைக்கு முதலுதவி சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். மேற்கூறிய அமைப்பை சேர்ந்தவர்கள் இந்திய அரசால் தடை செய்யப்பட்ட CPI மாவோயிஸ்ட் அமைப்பின் திரை மறைவு இயக்கங்களாகும்.

இவர்களால் சட்ட ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்று முன்கூட்டியே தகவல் தெரிவிப்பதற்காக நாங்கள் அலுவலில் இருந்தபோது இந்த சம்பவம் நடைபெற்றது. தற்போது பொது நல மாணவர் எழுச்சி இயக்கத்தை சேர்ந்த தினேஷ் என்பவர் சட்டவிரோதமாக வனத்தில் ஆயுத பயிற்சி மேற்கொண்டதாக கூறி கேரள மாநில தீவிரவாத தடுப்பு பிரிவு போலிசார் 2020 ம் ஆண்டு கை து செய்து தற்போது வரை கேரள மாநிலத்தில் சிறையில் உள்ளார்.

மேற்படி சம்பவம் 04.05.2019 ம் தேதி காலை சுமார் 9015 மணிக்கு நடைபெற்றது. இது சம்பந்தமாக மேட்டுப்பாளையம் காவல் ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தியை விசாரிக்கும்போது என்னை விசாரித்தார். மேற்கண்ட அருண்குமார் என்பவர் தற்போது நீதிமன்றத்தில் வலது பக்கத்தில் முதலாவதாக இருக்கிறார். அவருக்கு பக்கத்தில் மணிகண்டனும், அதற்கு அடுத்து ஹரிமன்னனும், அதற்கு அடுத்து ரவிக்குமாரும், இருக்கிறார்கள். மற்ற எதிரிகள் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யாமல் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் Deffer மனு தாக்கல் செய்வதாக சொல்லி கால அவகாசம் கேட்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.08.20 20:17:48 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் — மேட்டுப்பாளையம்.

**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**S.C. 216/2023.**

**CNR.No.TNCB19000**

| Deposition | : | PW.2 |
|---|---|---|
| Name | : | ஆர்.மனோஜ்குமார் |
| Father's / Husband Name | : | ராமசந்திரன் |
| Village / முகவரி | : | க்யூ பிரான்ச் |
| Taluk / தாலுக்கா | : | கோயமுத்தூர் |
| Age / வயது | : | 48 |

The witness sweared under Oaths Act 1969 on this the day of 20th August 2025

1, 6 எதிரிகள் ஆஜர் இல்லை. மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கோயமுத்தூர் க்யூ பிரான்சில் தலைமைக்காவலராக பணிபுரிகிறேன். கடந்த 03.05.2019 ம் தேதி காரமடை காவல் நிலைய குற்ற எண்.134/2019 சட்டப்பிரிவுகள் 174 குற்ற விசாரணை சட்டம் மற்றும் பிரிவு 306 இந்திய தண்டனைச்சட்டம் வழக்கில் இறந்துபோன பழனி என்கிற பழனிச்சாமி என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு காரமடை போலிசார் கொண்டு வந்தார்கள். அது தற்கொலை அல்ல. திட்டமிட்ட கொலை என்று இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 302 ஆக மாற்றக்கோரி பொதுநல மாணவர் எழுச்சி இயக்கம் அருண்குமார் சாதி ஒழிப்பு விடுதலை முன்னனி நாகராஜ், ஹரிமன்னன், மணிகண்டன், ரவிக்குமார்

ஆகியோர்களின் தூண்டுதலின்பேரில் இறந்துபோன பழனிச்சாமி என்பவரின் மகன் ரோகித் குமார் என்பவர் நிரூபர்களுக்கு பேட்டி அளித்துக்கொண்டிருந்தார். மேற்கண்ட அருண்குமார், மணிகண்டன் , ஹரிமன்னன் மற்றும் ரவிக்குமார் ஆகியோர்கள் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்கள். அருண்குமார் வலதுபக்கத்தில் முதலாவதாக நின்று கொண்டிருக்கிறார். இரண்டாவதாக மணிகண்டன் இருக்கிறார், மூன்றாவதாக ஹரிமன்னனும் நான்காவதாக ரவிக்குமாரும் நின்று கொண்டிருக்கிறார்கள்.

க்யூபிரிவால் கண்காணிக்கப்படும் அமைப்புகள் மற்றும் உறுப்பினர்கள் இந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்டுள்ளதால் சட்ட ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்பதற்காக க்யூ பிரிவு ஆய்வாளரின் உத்தரவின்பேரில் நானும் என்னுடன் பணிபுரியும் செல்வக்குமார், முதல்நிலைக்காவலர் 1668, காவலர் கிருஷ்ணமூர்த்தி 8244, ஆகியோர்கள் மேட்டுப்பாளையம் சவக்கிடங்கு அருகில் உள்ள பிரசவ வார்டு அருகில் ஆளுக்கொரு திசையி ல் கண்காணிப்பு பணியில் இருந்தோம். அப்பொழுது பெரியநாயக்கன்பாளையம் காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் அருண்குமார் , ஹரிமன்னன், நாகராஜ், மணிகண்டன், ரவிக்குமார் மற்றும் 4 ஆண்கள் ஒரு பெண் ஆகியோர்கள் காவல் துணைக் கண்காணிப்பாளரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.

அப்பொழுது கிருஷ்ணமூர்த்தி என்பவர் அங்கு நடக்கும் பிரச்சினைகளை அவரது செல்போனில் புகைப்படம் எடுத்து அந்த பிரச்சினைகளை கண்காணித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது பொதுநல மாணவர் எழுச்சி இய க்கம் மாநில ஒருங்கிணைப்பாளர் தினேஷ்குமார் என்பவர் படம் பிடித்துக்கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி என்பவரை ஆவேசமாக வந்து க்யூ பிரிவு போலிஸ் நாய் தாயோழி என்று திட்டி அவரை அடித்து இதோட செத்துப்போடா என்று சொல்லி உங்களால்தான் எங்கள் அமைப்புக்கு பிரச்சினை என்று கூறிக்கொண்டு கிருஷ்ணமூர்த்தியின் குரல்வளையை நெறித்து இதோடு செத்துப்போடா நாயே என்று சொல்லி தாக்கிக்கொண்டிருந்தார்.

அப்பொழுது நாகராஜ் என்பவர் ஓடிவந்து கிருஷ்ணமூர்த்தியை பார்த்து இந்த க்யூ பிரிவு நாய்களால்தான் நம்ம இயக்கத்திற்கு பிரச்சினை இவனை கொன்றால்தான் உளவுத்துறைக்கு பாடமாக இருக்கும் என்று கூறிக்கொண்டு அவரது முதுகில் ஓங்கி கையால் அடித்தார். அருகில் இருந்த அருண்குமார் ஓடி வந்து உன்னதாண்டா தாயோழி ரொம்ப நாளா தேடிக்கொண்டு இருந்தோம். இன்றோடு செத்தடா என்று கூறி தலையிலும் மார்பிலும் கையினால் குத்தினார். அங்கிருந்த கிருஷ்ணமூர்த்தி அடித்து கொன்று விடுவார்கள் என்று அலறி அங்கிருந்து சத்தம் போட்டார்.

அப்பொழுது அருகில் இருந்த மணிகண்டன் , மணிவன்னம், மாலதி, சேகுவேரா ஆகியோர்கள் இவனை விடாதீர்கள் கொன்று விடுங்கள் என்று ஆவேசமாக வந்து தாக்கினார்கள். தினேஷ்குமார் என்பவர் கிருஷ்ணமூர்த்தி என்பவரின் சாம்சங் செல்போன் J7 செல்போனை பிடுங்கி கிருஷ்ணமூர்த்தியின் தலையிலும் மார்பிலும் ஓங்கி அடித்தார்க ள். அடிதாங்கமுடியாமல் கிருஷ்ணமூர்த்தி கீழே விழுந்தார். அவரின் அலறல் சத்தம் கேட்டு அங்கிருந்த சில பொது மக்கள் தெறித்து ஓடினார்கள். அப்பொழுது பிரசவ வார்டிக்கு அருகில் கண்காணித்துக் கொண்டிருந்த நானும் செல்வக்குமார் என்பவரும் ஓடிப்போய் பார்த்த போது நாகராஜ் என்பவர் தினேசிடம் இருந்த கிருஷ்ணமூர்த்தியின் செல்போனை வாங்கிக்கொண்டு ஓடினார்.

அவர்களை விரட்டி பிடிக்க வேண்டும் என்று நானும் செல்வக்குமாரும் அவரை துரத்திக் கொண்டுபோனோம். பின்னர் அவர்கள் பின் வழியாக ஓடினார்கள். பின்னர் நாங்கள் அடிபட்ட கிருஷ்ணமூர்த்தியை பார்க்கும்போது அவரது தலையில் , மார்பில் முதுகில் அடிபட்ட நிலையில் கீழே விழுந்து கிடந்தார். அவரை அழைத்துக் கொண்டு மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு முதலுதவி சிகிச்சை கொடுத்து அவரை மேல் சிகிச்சைக்காக ஆம்புலன்சில் கோயமுத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம்.

அவரை கோவை அரசு மருத்துவமனையில் சேர்த்து விட்டு நானும் செல்வக்குமாரும் அலுவலகத்திற்கு சென்று விட்டோம். க்யூ பிரிவால்

கண்காணித்தும் C.P.I (ML) மாவோயிஸ்ட் திரை மறைவு இயக்கங்களின் நடவடிக்கைகளை க்யூ பிரிவால் கண்காணிக்கப்பட்டு அரசுக்கு அறிக்கை செய்யப்பட்டு வருகிறது. இதனால் அவர்கள் மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் க்யூ பிரிவு போலிசாரை பின் தொடர்ந்து எங்களை தாக்கி கொலைவெறி தாக்குதல் செய்துள்ளனர். இது சம்பந்தமாக மேட்டுப்பாளையம் காவல் நிலைய குற்ற எண். 172/2019 வழக்கு பதிவு செய்யப்பட்டு மேட்டுப்பாளையம் பொறுப்பு சிறுமுகை ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தியிடம் புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யப்பட்டது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யாமல் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் Deffer மனு தாக்கல் செய்வதாக சொல்லி கால அவகாசம் கேட்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.